1981

# மத்திய வாணி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

இந்து மாமன்ற வெளியீடு - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# இந்துமாமன்ற உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| காப்பாளர் : | அதிபர் அவர்கள் |
| இயக்குநர் : | திரு. வ. உமாபதிசிவம் |
| பெரும்பொருளாளர் : | திரு. க. சோமசேகரம் |
| பொதுச்செயலாளர் : | திரு. த. கனகலிங்கம் |
| (மாணவ) தலைவர் ; | செல்வன் இ. இரவிக்குமார் |
| செயலாளர் : | செல்வன் செ. ரூஜன் |
| உபசெயலாளர் ; | செல்வன் செ. முரளிதரன் |
| பொருளாளர் ; | செல்வன் கு. குலேஸ்வரன் |
| இதழாசிரியர் : | செல்வன் ஏ. ஜெகசோதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் உறைவிடங்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளையின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்,
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள் — வெள்

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள் — வெள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய  வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments of :



**SHANTHI TYRE WORKS**

Office : 38, Muneeswaran Road, Jaffna.

Workshop 218/2, Muneeswaran Road. Jaffna.

Phone ; 8085

Cable : Selvams.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments of

# GNANAMS STUDIO

படப்பிடிப்பாளர்

புளொக் தயாரிப்பாளர்

போட்டோஸ்ரற் பதிப்பாளர்

## ஞானம்ஸ்

301. மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம்.

---

மத்திய வாணிக்கு எமது சிறப்பு வாழ்த்துக்கள்

இளமையிற் கல்

## மில்க்வைற் யாழ்ப்பாணம்

★

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

525/2, காங்கேசன்துறை வீதி

த. பெ. இல. 77

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுவையான சிற்றுண்டி வகைகளுக்கும்

★ வகைவகையான உணவுகள்

★ சுவையான ஐஸ்கிறீம் மற்றும் கொத்துரொட்டி.

★ முட்டைரொட்டி போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

# ஜனதா ஹோட்டல்

2-ம் குறுக்குத் தெரு

யாழ்ப்பாணம்

---

மத்திய வாணிக்கு

எமது வாழ்த்துக்கள்

# கொமேஷல் பிறின்ரேஸ்

அண்ட்

# றேடேர்ஸ்

70 (30) பிரதான வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி ; 615.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி ; 7545

வண்ணத் துணியகத்து
எண்ணம்போல் தெரிவுசெய்ய
ஏற்றதோர் எழிற்கூடம்
நாகரிக ஜவுளிரகங்களுக்கு

# மணியம்ஸ்

16, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

கிளை ;

54 A, நவீன சந்தை யாழ்ப்பாணம்


---


With the best wishes from :

# YARL HALL

Of

# EDUCATION

★

93, 4, Main Street

Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# NORTHERN TRAVEL AGENCY

4/1, FIRST CROSS STREET,
JAFFNA.

Telephone: 7731

# Cantabia Institute

for efficicient Coaching in

ICMA (London) Section A
Section B

Professional Part I

Charted (Ceylon) Prelim.

IAA Part I
Part II
Part III
Part IV

IAB Prelim
Inter
Final

For Details,
DIRECTOR OF STUDIES
**CANTABIA INSTITUTE**
166, HOSPITAL ROAD
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

**Fashionable**

**Gents Tailors**

# ABTHEEN

# (5)

Grand Bazaar, — Jaffna

---

இல்லத்தரசிகள்
என்றும் விரும்புவது
**விருந்து**
வைபவங்களைச் சிறப்புறச்
செய்வது

உடனுக்குடன்
உங்கள் முன்னிலையில்
**மின்சார ரோஸ்டரில்**
வறுத்து
அரைக்கப்படுவது

**அண்ணா கோப்பி**

# அண்ணா கோப்பிக்கடை

**இல. 4 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 7413

தலைமையகம்
**அண்ணா தொழிலகம்**
இணுவில்.
தொலைபேசி : 7412

கிளை ;
**இல. 1, மத்திய சந்தை**
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முனைப்பில்...!

காகிதங்களின் விலை, அச்சுக்கூலியின் உயர்வு, மாணவர்களுக்கோ - ஆசிரியர்களுக்கோ ஒய்வுநேரத்தைத் தேடிக்கொள்ள முடியாத வாழ்க்கைப் போராட்டம். இந்த இன்னல்களின் மத்தியில் யாழ். மத்திய கல்லூரியின் இந்துமாமன்றம் அனுபவித்த பிரசவ வேதனையால் இம்முறையும் மத்தியவாணி உங்கள் கைகளில் புதுப்பொலிவோடு திகழ்கிறாள்.

இவளிடத்தில் இம்முறை வரவேற்கத்தக்க சில மாற்றங்களைக் கண்டு இதழாசிரியன் என்ற முறையில் நான் மகிழ்கின்றேன். வாணியன்றோ கலைத்தெய்வம்; அவள் வழங்கும் விடயங்கள் கணக்கிலலை என்றும், பல்வேறு விடயங்களையும் தொகுத்துத் தர முடியாமைக்கு வருந்தும் அதேவேளை முன்பிருந்ததைவிட இம்முறை கவிதை சகலகலாவல்லிமாலை என்பவற்றையும் சேர்த்துள்ளோம். இத்துடன் பக்கங்கள் அதிகரிக்கப்பட்டும் கட்டுரைகளின் எண்ணிக்கை கூட்டப்பட்டும் உள்ளது.

அதிபரின் ஆசிச்செய்தியும், திருமதி சித்திரலேகா மௌனகுரு, ஆசிரியர் திரு. எஸ். ஜெயரட்ணம் ஆகியோரின் விசேட கட்டுரைகளும், ஆசிரியர் திரு. ஏ. வி. லோகநாதன் அவர்களின் கவிதையும் மலரைச் சிறப்பிக்கின்றன.

மலர்வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த கல்லூரி அதிபர், இந்துமாமன்ற போஷகர்கள் ஆகியோருக்கும் கட்டுரைகள் தெரிவுசெய்ய உதவிய திரு. ஏ. வி. லோகநாதன் அவர்களுக்கும் கடமைப்பட்டுள்ளோம்.

பல கட்டுரைகள் கவிதைகள் வந்தும் சேர்த்துக்கொள்ள முடிந்த சிலவற்றையே இங்கு மலராக்கியுள்ளோம். சேர்த்துக் கொள்ள முடியாத படைப்புகளுக்காகப் படைப்பாளிகளிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

இந்துமதம் வாழ் மக்கள் இன்புற வேண்டுமென்பதே எமது வேணவா. இதற்கு மத்தியவாணி இம்மியளவாவது உதவுமாயின் அதுவே எமது மாபெரும் வெற்றியாகும்.

இவ்விதழைச் சிறந்த முறையில், குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய யாழ்ப்பாண அச்சக நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

நன்றி.

தங்கள் சேவைக்குரிய
இதழாசிரியர்
**ஏரம்பு ஜெகசோதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச்செய்தி

'மத்தியவாணி' மலரின் எட்டாவது ஆண்டு இதழ் இன்று மலர்வதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். எமது நவராத்திரி விழாவின் நிகழ்ச்சிகளில் இந்த விசேட மலர் வெளியீடு ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இடம்பெற்றுள்ளது. யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றத்தின் இம்முயற்சி பாராட்டுக்கு உரியது. பெரியோரின் ஆசி உரைகளும், அறிஞரின் அறிவுரைகளும் எமது மாணவர்களின் கட்டுரைகளும் தன்னகத்தே கொண்ட இம்மலர் சகலகலாவல்லிக்கு சமர்ப்பணமாக அமைகின்றது. மாணவர்களின் சமய முயற்சிகளுக்கும் செய்திறன் ஆற்றல்களுக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. எமது கல்லூரி மாணவ சுயமுயற்சித் திட்டங்கள் பலவற்றில் முன்னோடியாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. நவராத்திரி காலத்தில் விசேட மலரேடு வெளியிடுவதிலும் எமது கல்லூரி மற்றோருக்கு வழிகாட்டியாக இருப்பது எல்லோரும் அறிந்ததே. இத்தகைய நற்பணிகளில் நாம் தொடர்ந்து முன்னேற ஆதிபராசக்தி அருள் எமக்குக் கிடைப்பதாக.

சக்தியின்றி அசைவு இல்லை. சக்திகள் எல்லாம் இறைசக்தியின் ஊற்றாகும். இந்து மதத்தில் சக்திக்கு வடிவமும், வழிபாடும் அமைத்து வழிபாட்டுக்கு விசேட தினங்களும் குறிக்கப்பட்டுள்ளன, வணக்கமும் பூசைவழிபாடுகளும் நிறைந்த இந்நாட்களில் சிறப்பாக எம்மாணவரும் பொதுவாக மாணவ சமுதாயமும் வீர உணர்வும் கல்விஞானமும் நற்செல்வங்கள் பலவும் பெற்று இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ சகல அனுக்கிரகங்களும் அனுகூலங்களும் அவர்களுக்கு உண்டாக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

மத்தியவாணிமூலம் இந்த ஆசிச்செய்தியைக்கூற எனக்குக் கிடைத்த வாய்ப்பினை அரும்பெரும் சந்தர்ப்பமாகக் கருதுகிறேன். மத்திய வாணிக்கு என நன்றி.

வாழ்க மத்திய வாணி!

வாழ்க நம் பெரும் கலைகள்!

நா. சா. இரத்தினசிங்கம்

அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்த்தெய்வ வழிபாடும் தமிழர் சமூகமும்

— சித்திரலேகா மௌனகுரு
விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்-பல்கலைக்கழகம்

கல்வி, செல்வம், வீரம் ஆகிய முப்பெரும் நலன்களையும் அளிக்கும் பெண் தெய்வங்களை நவராத்திரி விழாவின்போது வணங்கிக் கொண்டாடுவது தமிழர் சமூகத்தில் தேசிய விழா போன்றதொரு முக்கியத்துவத்தினை இன்று பெற்றுவிட்டது. சமய சார்பு அல்லது சமயப்பற்று என்பவற்றையும் கடந்து நிற்கும் தன்மை இன்றைய நவராத்திரி விழாவிற் காணப்படுகிறது. இச்சந்தர்ப்பத்திலே பெண் தெய்வ வழிபாடு அல்லது தாய்த் தெய்வவழிபாடு குறித்து சில குறிப்புக்கள் கூறுவது பயனுடையதாகும்.

தாய்த்தெய்வ வழிபாடு தமிழருடைய புராதன வழிபாடாகும். ஆனல் தமிழரிடையே மட்டுமன்றி புராதன உலகில் பல சமூகங்களிடையேயும் நிலவிவந்த ஒருபொதுவான வழிபாடாகும் என்பது பல்வேறு ஆராய்ச்சிகளாலும் இன்று உறுதிப் பட்டுவிட்ட உண்மையாகும். பெரும்பாலும் பயிர்த்தொழிலை மேற்கொண்டிருந்த புராதன சமூகங்களிடையே பெண்தெய்வங்களே பிரதானம் பெற்றிருந்தன. அவை படைப்புத் தெய்வங்களாகவும், செழிப்புத் தெய்வங்களாகவும் வழிபடப்பெற்றன. புராதன விவசாயத்தைக் கண்டுபிடித்துச் செய்த பெண்களின் சமூக உயர்வில் இருந்து இவ் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவின் புராதன நாகரிகமாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்தில் பெண் தெய்வ வழிபாடு முதன்மை பெற்றிருந்தது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சுட்ட மண்ணால் செய்யப்பட்ட பெண் உருவங்கள் அக்காலத்தில் பெண்தெய்வத்தினுடையதாக இருக்கலாமெனக் கருதுகின்றனர். சிந்துவெளியில் மாத்திரமன்றி சுமேரிய நாகரிகத்திலும் பெண்தெய்வவழிபாட்டிற்குச் சிறப்பான இடமிருந்தது. கிரீஸ், பபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளில் வழங்கி வரும் படைப்புக்கதைகளிலும் தாய்த்தெய்வம்பற்றிய பல செய்திகள் நிறைந்து கிடக்கின்றன. இவை பெண்தெய்வம் அல்லது தாய்த் தெய்வத்தின் பழமைக்கு சான்று பகர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் சமூக அந்தஸ்து மேனோங்கியும், அதற்கு அடிப்படையாக விவசாயம் பெண்களின் தொழிலாகவும் இருந்த சமூகங்களில் பெண்தெய்வ வழிபாடு முதன்மை பெற்றிருந்தது. இன்னோர்வகையிற் கூறினல் பெண்வழி உரிமை அல்லது தாய்வழி உரிமை நிலவியசமுதாயத்தில் பெண்தெய்வங்களும் முக்கிய இடம் பெற்றிருந்தன. (தாய்வழி உரிமை-தாய்வழியாகச் சொத்துக்களும்,வாரிசுகளும் தொடருதல்) இதனைத் தந்தைவழிச்சமூக அமைப்பையும் தாய்வழிச்சமூக அமைப்பையும் ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்த சமூகவியலாளர் ஐயத்துக்கிடமின்றி எடுத்துக்காட்டியுள்ளனர். ''தேவலோகத்து வழக்கிலே ஆண் பெண் தெய்வங்களுக்குரிய ஏற்றத்தாழ்வுகள், அடிப்படையில் நிலவுலகிலே காலமாற்றத்துக்கு ஏற்ப ஏற்படுகின்றன'' என்று சமூகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டது இங்கு நினைவு கூரத்தக்கது.

பண்டைய மக்கள் மனிதனை உலகில் உருவாக்கும் மாபெரும் சக்தியாகப் பெண்ணைக் கருதினர். பெண்ணுடைய இனப்பெருக்க சக்தி, மந்திரத் தன்மைவாய்ந்ததாகக் கருதப்பட்டது. குழந்தைப்பேறு, பயிர்களின் வளர்ச்சி, செழிப்பு ஆகியவை யாவும் ஒரே அடிப்படையிலேயே நோக்கப்பட்டன. மனித வளர்ச்சியுடனும், பயிர்களின் வளர்ச்சியுடனும் பெண்ணைத் தொடர்புபடுத்தி வணங்குதலும் போற்றுதலும் பெண் படைப்புக்குரியவள் என்ற அடிப்படையிலாகும். புராதன மக்களிடை காணப்படும் வளச்சடங்குகளிலும் (Fertility rites) பெண்முதன்மைபெறுவது இக்கருத்தை மேலும் விளக்கும்.

பண்டைத் தமிழரிடையேயும் தாய்த்தெய்வவழிபாடு நிலவியுள்ளது. அதுவே முதன்மைபெற்றுமிருந்துள்ளது. இதற்கு இலக்கியச்சான்றுகள் உள்ளன. மேலும் தாய்த்தெய்வவழிபாட்டின் எச்சங்களை அகழ்வாராய்ச்சியும், நாட்டுப்பண்பாட்டு ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன.

பண்டைத் தமிழரின் தாய்த்தெய்வம்பற்றி சங்க இலக்கியத்திலும், மணிமேகலை, சிலப்பதிகாரத்திலும் பல முக்கிய குறிப்புகள் உள்ளன. வெவ்வேறு வகையான தாய்த் தெய்வங்கள் இருந்ததையும் அவற்றின் இயல்புகள் சில சமயங்களில் இணைந்து வளர்ச்சிபெற்றமையும் இக்குறிப்புகள் புலப்படுத்துகின்றன. கொற்றவை, கானமர் செல்வி, காடமர்செல்வி, காடுகிழாள், பழையோள், முதியோள் என்னும் பெயர்களால் தாய்த்தெய்வம் அல்லது பெண்தெய்வம் குறிப்பிடப்பெற்றுள்ளது. வெற்றித் தெய்வமாகவும் அச்சந்தரும் தெய்வமாகவும் பெண்தெய்வம் கருதப்பட்டது. பெண்தெய்வத்திற்கு நரபலியிடும் வழக்கமும் இலக்கியங்களில் பேசப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழரிடை தாய்த்தெய்வத்தின் முதன்மையை, முருகனைக்குறிப்பிடும் தொடர்களில் இருந்து அறிந்துகொள்ள லாம். முருகனைக் கொற்றவையின் புதல்வன் என்றே பல இடங் களிலும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'கொற்றவை சிறுவன்" 'பழையோள்குழவி' என்னும் தொடர்கள் தேவலோ கத்திலும் பெண்வழியாகவே வம்சாவளி தொடர்வதைக்குறித்து நிற்கின்றன. இத்தொடர்கள் தாய்வழிஉரிமைக்கும் தாய்த் தெய்வவழிபாட்டுக்குமிடையே இருந்த அத்தியந்த பிணைப்பை யும் சுட்டுகின்றன.

எனினும் பிற்பட்ட காலங்களில் தமிழர் சமூகத்தில் பெண்தெய்வம் பெற்றிருந்த முக்கியத்துவம் ஒப்பீட்டளவில் குறைந்தது. வடநாட்டு நாகரிகக் கலப்பாலும், தமிழர் சமூக வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களாலும் இந்நிலை ஏற்பட்டது. ஆண்தெய்வமான சிவனே சைவசமயத்தின் முழுமுதற் கடவு ளாயிற்று. இம்மாற்றத்தை இச்சிறுகுறிப்பில் விபரித்தல் இய லாது. ஆனல் ஒன்று கூறலாம். சமூகத்தின் உயர்மட்டத்திலும் சாஸ்திரரீதியான சமய நம்பிக்கைகளிலும் வழிபாட்டிலும் ஆண் தெய்வம் முதன்மைபெறினும் தமிழரின் கிராமத் தேவதைகள், பொதுமக்கள் தெய்வங்கள் அனைத்துமே ஏறத்தாழப் பெண் தெய்வங்களாக உள்ளன. வளத்தைப் பெருக்குவதிலிருந்து வாட் டும் நோயிலிருந்து தப்புவதற்கு வரை அன்னையையும், அம்மை யையும் மக்கள் வேண்டுவது வெளிப்படை. திராவிடப் பெண் தெய்வங்கள்பற்றி ஆராய்ந்த மூர் என்பவர் கிராமமட்டத்தில் சுமார் இருநூறு பெயர்களில் பெண்தெய்வங்கள் பிரபலம் பெற்றுள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார். இதுமட்டுமன்றி இலங் கையில் மட்டக்களப்பிலும், தென்னிந்தியாவில் மலையாளம் போன்ற திராவிடப் பகுதிகளிலும் மந்திரம், மாயவித்தை, தந்தி ரம் என்பவற்றுக்கும் பெண்தெய்வங்கட்கும் தொடர்பு உண்டு. இதுவும் பெண்தெய்வங்களின் முக்கியத்துவத்தையே சுட்டுகின் றது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து தாய்த் தெய்வவழிபாடு உலகின் புராதன வழிபாடு என்பதும், அது பழந்தமிழரிடையே சிறப்புற்றிருந்தது என்பதும் அதற்கு ஒரு சமூகபொருளியல் அடிப்படை இருந்ததென்பதும் பெறப்பட்டது. சமூகத்தின் உயர் மட்டத்தில் மாற்றம் ஏற்பட்டு பெண்தெய்வவழிபாடு முக்கியத் துவம் குறைந்ததெனினும் பொதுமக்கள் சமயத்தில் அதன் சிறப்புத் தொடர்ந்து நிலவுகின்றது. சமூகத்தின் உயர்மட்டத் திலும் நவராத்திரிவிழா தமிழர்சமூகத்தில் பெண்வழிபாடுபெற் றிருந்த முக்கியத்துவத்தின் அடையாளமாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் மகாசக்தியின் சேமிப்புக் கலன்களாவோம்

மனம் ஒடுங்கி மெய்சிலிர்த்து கரங்குவித்து கற்க. கற்ற கல்வியை நல்கிடவும், நல் ஆசான்களை நம் சிறார்கள் பெற்றிட வேண்டுமென வாணி, நித்திய கல்யாணி வெண்டாமரையாள் போற்றிச் சிரமேல் ஏத்தி வாழ்த்துகிறேன். ஊமைக்கும் புலவர்க்கும், ஞானியற்கும், அஞ்ஞானியர்க்கும் கல்வித்தேனை அள்ளியூட்டும் தாய்ப்பதியே நின்கருணை கண்ணேக்கி நிற்கின்றேன். நின் இன்முகமும் புன்முறுவலும் கிடைக்கப்பெறின் செல்வத்தில் மேலாம், மழலைச் செல்வம் பெற்று அரசரோடு சமநிகராகத் திகழ்ந்திட வைத்துளாய். கலாசாலைப் பட்டத்தோருடன் சகல கலாஞானம் பற்றி உரையாடிடவும் யான்பெற்ற கல்வியை மற்ருேருக்கு ஊட்டவும் வரம்தந்திட்டாய் ஓங்காரி, சடாதரி, சம்பூரணி, அகிலாண்ட நாயகி.

அகிலாண்ட கோடிகங்களையும், பிரமாண்ட தேவர்களையும் ஆட்டிவைக்கும் சக்தி உண்டென்பதை நாஸ்திகரும் நம்புகின்றனர். இச்சக்தியின் தோற்றத்தைக் கண்டு, உணர்ந்தும் அறியார் விஞ்ஞானிகளும், தத்துவ ஞானிகளும், ஏன் பரமஞானிகளும்கூட சக்தி அநாதியானது. காலத்துக்குக்கால எண்ணரிய உருவில் உணரற்பாலது இச்சக்தி. மனிதன் தன் சிற்றறிவினுல் தன் சக்தியை பெரிதென எண்ணி சக்தியற்ற அப்பாவிகளை, ஆன்மாக்களைத் துன்புறுத்துகிறுன்; ஆனுல் இது ஈற்றில் மகாசக்திக்கு பலியாகிறுன். இதை உணரத் தவறுகிறுர்கள். அரசியல்வாதிகள் தளபதிகள், ஜனுதிபதிகள், சர்வாதிகாரிகள், ஏன் மகாராஜாக்களும், மகரிசிகளும், இவர்களின் கலாட்டாக்கள், ஆக்கிரமிப்புக்கள் யாவும் ஈற்றில் மகாசக்திமுன் எதிர்நிற்கவில்லை என்பதை மனிதன் அறிந்திருந்தும், அவனின் ஆணவம் அழிவுக்கு இட்டுச் செல்கிறது. அகில உலகமும் நம்மை எதிர்த்திட்டபோதும் பராசக்தியில்பூரண நம்பிக்கை இருந்திடின் நம்மை இன்பமே என்றும் சூழவைக்கும்.

இச்சக்தியுடன் நாம் இரண்டறக் கலக்கின் துன்பங்கள் அணுகா, நோய் அகலும், வேண்டுவன கிட்டும், இவை ஆயின் இந்நிலை எப்படி அடைவதென்பது அறியற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாண்ட லோகமே ஒரு சக்தி உறைவிடம், இதில் ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு இம்மியளவான கலன். இக்கலனில் சக்தி உண்டு. இச்சக்தியைக்கூட்டவும் குறையவிடாமல் இருக்க முயல்வதே யோகநிலை. இந்த யோகநிலைக்குத் தூண்டுகோல்தான் பிராணாயம். அண்டவெளியில் பிரணமித்துக்கொண்டு இருக்கும் சக்தியிலிருந்து நம்மிடத்தில் உள்ள சக்திக் கலன்களுக்கு இழுப்பதற்கு நாம் நல்ல சௌக்கியமான நிலையில் அதாவது நமது சதைக்கட்டுக்களையும் நரம்புகளையும் உணர்ச்சிகளைப் பூரணமாகத் தளர்வுறச் செய்துகொண்டு, கண்ணைமூடி இரு கைகளையும் ஆகாயத்தை நோக்கி இருக்க, மடிந்து இருக்கும் முழங்கால்மீது வைத்துக்கொண்டு, பிராணயத்தை உள்ளே எடுக்கும் பொழுது சக்தியை உடல்முழுவதும் பரவவிடுவதாகக் கற்பனை செய்து சுவாசத்தை உள்ளடக்கி சிறிதுநேரம் கழிந்து பிராணயத்தை வெளியேற்றிடின், நம்முள்ளே ஒரு புதுத்தெம்பு பிறப்பதை உணரலாம். இதனால் நம்முடம்பின் இரத்தோட்டம் துரிதப்படுவதுடன் நம்மை அறியாமலே சில சக்திகளைப்பெறுகிறோம். இச்சக்தியை விரயப்படுத்தாமல் நற்சிந்தனைக்கும் செயலுக்கும் பயன்படுத்தின் நாமும் நமது சமுதாயமும் தாய்நாடும் சிறப்புறும், நமக்கு அதர்மவழிநின்று, ஹிம்சை விளைவிப்போரும் ஹிம்சையினால்தாமே அழிந்தொழிவர். தாயான மகா சக்திதன் சேயாம் ஆன்மாக்களைக் காக்க வீறுகொண்டெழுவாள்.

இச்சக்தியைச் சேமிக்க உறுதியான உடலும், இவ்வுடலை உறைவிடமாகக்கொண்ட ஆன்மாவை ஞானத்தில் இலயிக்க வைத்திடின் செல்வம்தானே குவியும் இதனை உருவகப்படுத்தியே கீழைத்தேச மக்கள் நவராத்திரி தினங்களில் உடற்சக்திக்கு, துர்க்காதேவியையும், ஞானசக்திக்கு சரஸ்வதி தேவியையும் இந்த இரண்டினைச் செயற்படுத்த இலக்குமி தேவியை வழிபடுகிறார்கள். இதுவே இவைமூன்றும் ஒருங்கிணைந்திடின் ஆணவம்; அகங்காரம் அதர்மம் ஒடிமறைவதை எடுத்துக்காட்டுவதே விஜயதசமியாம்.

ஒரு ஆன்மாவானது முன்செய்த வினைகாரணமாக மனிதப்பிறவியெடுத்தும் முதற்குரலாக 'அம்மா' என்று கதறுகிறது. அதுதன் பசியைத் தீர்க்கவும் உதவிக்கும் குரலெழுப்புகிறது. இதனைக் கருத்திற்கொண்டுதான் நம்மூதாட்டியாம் ஔவையார் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பெற்றோரைத் தெய்வமாக்கியதுடன் பெண்மைக்கு முதலிடம் கொடுத்துள்ளார். நமது குரவர்கள் இறைவனை நோக்கி அழைக்கும்போது "அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையே அப்பா'' என்று பாடவும் முற்பட்டனர். திருஞான சம்பந்தரும் பயத்தில் அழுதிட பயத்தைப்போக்க அம்மையே திருமுலைப்பால் கொடுத்தார்; இதனாலேயே பயத்தைப் போக்கவும் உடலுக்குசக்தியை ஊட்டவும் பெண்மைக்கே ஆகும் என்பது தெளிவாகின்றது. இதனாலேயே உலகபந்த பயத்தை நீக்க தீயவற்றை ஒழித்திட அன்பு மார்க்கம் செழிக்க ஞானத்தையும், வீரத்தையும், செல்வத்தையும் மூலசக்திகளாக, பெண்மையின் சிகரமாம், தயை, இரக்கம், மன்னிப்பு ஆகிய முக்குணங்களையும் சித்திரிக்கும் சக்திகளாக ஞானிகள் வழிபடலாயினர். இன்றைய பொருளாதார மந்த நிலைக்குக் காரணம், நாம் நிலம் தொழில் முதலீடு ஆகிய இம்மூன்று சக்திகளை சரியான முறையில் ஒருங்கிணையச் செய்யாமையே, இம்மூன்றின் விஞ்ஞான ரீதியான ஒருங்கிணைப்பே நம் உலகின் பூரண சுயபூர்த்தி இல்லை சுவர்க்கம் — முக்தி இன்பம் எங்கே ஒரு நாட்டில் சுயபூர்த்தி ஏற்படுகிறதோ மிஞ்சியதை மற்றவருக்கு பிரயோசனமாக்குவதை விட்டு சுயநலனுக்காக புண்ணியமானதை ஒறுத்து பாவத்தை வளர்க்க, ஆக்கப்பட்ட பொருளை அழித்து விடுதலாலேயே பஞ்சம் இதன்விளைவாய் பிணி ஏற்படுகிறது. எனவே இம்மூன்று சக்திகளினால் நாம்பெற்ற பேறும் பொருள்களை இல்லாருக்கு இட்டு உண்டு (கொடுத்து நாமும் அனுபவித்து) இருப்பதையே நம் ஞானிகள் கண்ட உண்மை. இதுவே நவராத்திரி சக்தி வழிபாட்டின் தத்துவம்: சகல உயிர்களின் ஆன்மீக உடல் உழைப்பினால் பெற்ற உலகப்பொருட்களை பகிர்ந்து அனுபவித்தால் சுவர்க்க வாழ்வைக் காணும் பேறு நமக்குக் கிட்டும் — இதனாலேயே ''இட்டுண்டிரும்'' என்றும்,

''தான் பெற்ற இன்பம் வையகம்பெற''
''பொருளிலார்க்கு இவ்வுலகில்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை'' என்றும்

பொருளை இல்லை யொனுது கொடுக்கும். வேளாண்மையே மேலான குணமென்றும். இவைவெல்லாவற்றையும் இயக்கிவிப்பது ஒரு மகாசக்தி என்றும், சக்தியின்றி சிவமில்லை என்றுகூறிச் சக்தியை வழிபட்டு அட்டமாசித்திபெற்று வாழ்வோமாக.

ஓம் மகாசக்தி — நின்சக்தி, எம்மில்
பிரணமிக்கும் சக்திக் கலன்களாக்கிடு தாயே!

எம். ஜெயரத்தினம்
(ஆசிரியர்)
யாழ்/மத்தியகல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியை பயன் செய்வோம்!

1. முப்பெரும் சக்திகள் வேண்டுமே!
இங்கு முன்னின்று எம்மவர் சீர்பெற;
தப்பில்லை சக்திவணக்கமே! — எங்கள்
சரித்திரம் சொல்கின்ற பாடமே!

2. அப்பொழு தெம்மவர் பேசினர்
கல்வி அனைவர்க்கும் அவசியமென்றிட்டார்
எப்பொழுதாயினும் எதிர்கொள்ள என்றுமே
வீரம் வேண்டுமென்றார்

3. முப்புரம் எரிசெய்த சிவனும் உமை
முட்டியதாலன்றோ சக்திபெற்றான்
வெப்பத்தின் சக்தியும் நீரில்செல்ல — எரி
விறகுமே வேண்டும் என்பதுபோல்......

4. இப்பெரும் உலகிலே செல்வமின்றேல்
ஏதுசெய்வார் ஏனை இரண்டுமுண்டேல்
தப்பில்லை இம்மூன்றும் சக்தியென்றார்—ஆம்
தவறேது மூன்றுமே சக்திதானே!

5. இப்புவி இதற்கொரு பெருமை தந்து
இறையென இதனையே வணங்கவைத்து
இப்படிச் சொன்னது தப்பு இல்லை—இவை
முக்கியம் என்பதை உணரவைத்தார்

6. எப்படியாயினும் இதனை நோக்கி
எதனையும் சொல்பவர் சொன்னபோதும்
'மப்பி'லே நூலகம் எரிக்கும்போது—தாயே
மதுவெறி தடுத்திட வீரம்வேண்டும்

7. செப்பவா இப்புவிமீது எங்கள்
சிறுபான்மை சிறுமைகள் தீர்ந்துபோக...
தப்பில்லை சரித்திர தேவைக்கேற்ப -என்றும்
சரிவர மூன்றையும் பயன்செய்வோமே!

திரு. ஆ. வை. லோகநாதன்
(ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துணை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்(து)அடி போற்றுகின்றேனே.

# துர்க்காதேவி வணக்கம்

பரங்கிரியின் மேவியருந் தவமிழைத்து
விறல் சேர்ந்து பாரு லோங்கித்
திரங்குலவும் அவுணனையே வீட்டியவன்
சிரமிதித்த சிலம்பினளை
வரங்குலவு வேலவனர் மணக்கோலம்
கண்டிருந்த மகிழ்ச்சி யாளைக்
கரங்குலவு சங்காழி தரித்து வளர்
துர்க்கைதனைக் கருத்துள் வைப்போம்.

# இலக்குமிதேவி வணக்கம்

பொன்னரசி! என்னுமுயர் புகழரசி! ஸ்ரீதேவி!
புகழ்கொள்நா ரணன்தேவியே!
பூதலம் பாதலம் விண்ணுலக மெங்குமே
புகழ்கொண்ட ஸ்ரீதேவியே!
மின்னரசி! செங்கமல மீதுவதி லட்சுமி!
மிளிர்வதன தனலட்சுமீ!
மிகவறுமை பீடிக்க மற்றவர்க ளெனையெள்ள
மிடியுழை் வாழு கின்றேன்;
மன்னரசி! மண்ணரசி! விண்ணரசி! ஸ்ரீதேவி!
மாசிலாத் தனலட் சுமீ!
மண்புவியில் வாழ்மனிதர் தங்களொடு சமமாக
மாட்சியோடு வாழ அருள்வாய்!
என்னரசி! என்றனுக் கினியவருள் செய்துமே
என்றுமெ ன்கத்தி ருந்தே
எழில்நடம் புரிகுவா யினியதன லட்சுமீ!
இணையடிக ளேத்தி னேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமரகுருபர அடிகள் அருளிய

# சகல கலாவல்லி மாலை

### உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

### நற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகலகலா வல்லியே.

### கலைமகள் அருளிக் குளிக்க விரும்புதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும்படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

## நெஞ்சத்தடத்தினில் நிலவ வேண்டுதல்

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத்திருந்தாய்
சகல கலாவல்லியே.

## பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமென்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

## பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
　　முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
　　வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
　　முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
　　சகல கலாவல்லியே.

## சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
　　ஞானத்தின் தோற்ற மென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவ
　　ர்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
　　டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
　　சகல கலாவல்லியே.

## மன்னர் தம்மையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
　　மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற் பணியச்செய்
　　வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
　　டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
　　சகல கலாவல்லியே.

✕　　✕

# நவராத்திரி

நவராத்திரி சக்தியின் விரதங்களுள் ஒன்று. நவ என்றால் ஒன்பது. நவாாத்திரி என்றால் இரவுகள். எனவே நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள் என்று பொருள்படும்.

ஒன்பது நாள் இரவுகள் சக்திக்காக நோன்பிருந்து வழிபடுவர். இது உலகின் பல்வேறு பாகங்களிலும் பலவிதமாகக் கொண்டாடுவர். " தசரா " என்று வட இந்தியாவிலும், யப்பான் போன்ற நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

ஒன்பது இரவுகளிலும் முதல் 3 நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த 3 நாட்களும் செல்வத்தை வேண்டி மகாலட்சுமியையும், கடைசி 3 நாட்களும் கல்வியை வேண்டி கல்வித் தெய்வமாம் கலைவாணியையும் வழிபடுவர். சில மக்கள் ஒன்பது நாளும் உபவாசம் இருந்து அல்லது ஒன்பது நாளும் சாப்பாட்டைத் தவிர்த்து நோன்பு நோற்பர்.

ஒன்பதாவது நாள் இரவு வீடுகளில் அலங்காரப்பூஜையாக கொண்டாடுவர். ஒவ்வொருவரும் தத்தம் வசதிக்கேற்ப அலங்கார கொலுக்கள் வைத்து குழந்தைகளை வேடம்பூணுவித்து நாடகம் ஆடச்சொல்லியும் மகிழ்வர்.

பத்தாம் நாள் வெற்றித்தினமாக அனுட்டிப்பர். விஜய தசமி என அழைக்கப்படும். 'விஜய' என்பது வெற்றி என்றும் தசமி என்பது பத்து என்றும் பொருள்படும். பத்தாம் நாளான விஜயதசமி அன்று மக்கள் தத்தம் தொழிலுக்கு ஏற்ற கருவிகளை பூஜையில் வைத்து வழிபட்டு எடுத்து தத்தம் தொழில்களை ஆரம்பிப்பார்.

ஆசிரியப் பெருந்தகைகளைக் கொண்டு மழலைச்செல்வங்களுக்கு ஆரம்பக்கல்வியை பழைய சம்பிரதாயப்படி ஆரம்பித்து வைத்து மகிழ்வர்.

இப்படியான சக்திவழிபாட்டுக்குரிய நவராத்திரி விரதத்தை நாமும் மேற்கொண்டு சக்தியின் அருளை பெறுவோமாக.

அ. இராஜேந்திரன்
வகுப்பு 8 B
யாழ். மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்க்கையில் சமயத்தின் பங்கு

எ. ஜெகசோதி
12 A
யாழ். ம. கல்லூரி.

மனிதன் மனிதனாக வாழ பெருமளவு உதவி புரிவது சமயத்தைத் தவிர யாதொன்றுமில்லை. மனிதனாக வாழ அறிவு தேவை, ஒழுக்கம் தேவை, மனக்கட்டுப்பாடு தேவை, நற்பண்பு தேவை, பெரியோரைக் கனம்பண்ணும் தன்மை தேவை. இவைகள் இல்லாவிடின் மனிதனாக பிறந்து மனிதனாக வாழ்வதில் எதுவித அர்த்தமும் இல்லை. மனிதன் வெறும் இயந்திரமல்ல; அவனுக்கு ஆறறிவு உண்டு; உணர்வுகள் உண்டு. இல்லாவிடின் அவனுக்கும் மிருகங்களுக்கும் வேறுபாடு இல்லை; மனிதனாக வாழ ஒழுக்கம் முதலியவை அவசியம் தேவை. இவற்றை அடைய உதவி புரிவது சமயம் அன்றி வேறொன்றும் இல்லை என்பதை எல்லோரும் உணரல்வேண்டும். மனிதன் வெறும் இயந்திரமாக இயந்திரங்களுடன் வாழ்வதனால் அவனுடைய உணர்ச்சி கட்டுப்படுத்தப்படும். இதனால் பின் ஒரு சந்தர்ப்பத்தில் அவனுடைய உணர்ச்சிகள் வெடித்து எரிமலைபோல குமுறத் தொடங்கும். இந்நேரத்தில் அவனை எந்த ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் சமயத்தை ஒழுகி வழிநடந்து வருவதால் அவனுடைய சிந்தனைகள் கடவுள் மார்க்கத்தில் ஈடுபடும். எனவே அவன் உணர்ச்சிகள் தானாகவே கட்டுப்படும் என்பது சகலரும் அறிந்த உண்மையாகும்.

சிலரின் சிந்தையில் கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்ற எண்ண அலைகள் பிரதிபலிக்கும். இது எமது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட விடயம். எமது நோக்கம், நாம் விரும்புவது அமைதியான வாழ்வைத்தான். தென் இந்திய அறிஞர் ஒருவர் கூறுகிறார். கடவுள் இருக்கின்றாரோ இல்லையா என்ற பிரச்சினை எமக்கு தேவையில்லை. கடவுள் இருக்கிறான் என்று நம்பு. அந்நம்பிக்கை நிச்சயம் உன்னை மனிதரில் மாணிக்கமாக சுடர்விடச் செய்யும். இஃது எத்தனை பெரிய உண்மை. இக்கூற்றை நாம் பின்பற்றுவோமாயின் எம்வாழ்க்கையில் என்றென்றும் இன்பமும் மகிழ்ச்சியும் நிலவும் என்பது உறுதி. நாம் ஒரு தீய செயலை செய்ய முற்படும்போதும் செய்தபின்னரும் எம்மனச்சாட்சி கேட்கும் கேள்விக்கு எம்மால் ஒரு பதிலும் சொல்ல முடியாது. இச்சந்தர்ப்பத்தில் மனச்சாட்சி நீதிபதியைப்போல் நடந்துகொள்கின்றது. எனவே நாம் எச்செயலையும் புரிந்துவிட்டு தப்பித்துக்கொள்ள முடியாது. எனவே மனச்சாட்சியை எமக்குக்கீழ் கொண்டுவர ஒரேவழி இறைவழிபாடு ஒன்றேயாகும். கடவுள் எங்குமுள்ளான்; உன்னிடத்திலும் உள்ளான், என்னிடத்திலும் உள்ளான் என்று நாம் நினைத்தால் எவ்வித பிரச்சினைக்கும் இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் புராணங்கள் இதிகாசங்கள் சைவசித்தாந்தங்கள் என்பனவற்றைப்பற்றி ஏளனம் செய்கின்றனர். ஒரு நூலைப் படிப்பிக்கும்போது அதாவது படிக்க முற்படும்போது அதைப் பற்றி தப்பபிப்பிராயம் கொள்வோமேயானல் நிச்சயம் அதனை படித்து நாம் ஒன்றும் விளங்கிக்கொள்வதுமில்லை ; அதனால் பயனடையப்போவதும் இல்லை; ஆனல் இது நிச்சயமாக சிறந்தது; இதன்மூலம் நாம் பயனடையக் கூடியதாக இருக்கும் என எண்ணிப் பார்ப்போமாயின் அது எமக்கு நல்லவற்றைத் தரும். வாழ்க்கையில் நிம்மதி வேண்டும்; மகிழ்ச்சிவேண்டும்; அமைதி வேண்டும்; இவை இல்லாவிடின் நாம் வாழ்வதில் எதுவித பிரயோசனமும் இல்லை எனலாம். சமய வழிபாட்டில் ஈடுபடாதவரின் நிலை சிந்திப்பதற்குரியது. இவ்விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞானத் துறையில் சாதனைமேல் சாதனை நிலைநாட்டி புதுவேகத்தை உண்டுபண்ணும் உலகப்பெரு வல்லரசான அமெரிக்காவின் சிக்காக்கோ மாநிலத்தில் கூடியதொகை மனநோயாளர் விடுதிகளும் சிறைச்சாலைகளும் உண்டு. இதற்குக் காரணம் என்ன? இதை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். ஆனல் ஒன்று அம்மாநிலத்தில் சமய நெறிகள் பேணப்பட்டு வந்திருந்தால் நிச்சயமாக இச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்பது உண்மை. இறைவழிபாடு இல்லாவிடில் அன்பு, பாசம், சகோதரத்துவம், கருணை என்பவற்றிற்கு இவ்வுலகில் இடமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இயந்திரத்தோடு இயந்திரமாக உழைத்துவிட்டு பின்பு கணவன் மனைவி, தாய், பிள்ளை என்று அன்புகொள்ள முடியாது. நேசம்கொள்ள முடியாது, இதற்கெல்லாம் வழிவகுப்பது இறைவழிபாடு ஒன்றே. நான் இதுவரை கூறியதிலிருந்து வாழ்க்கைக்கு சமயத்தின் பங்கு எத்தனை அவசியம் என்பதை புரிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். இறைவழிபாடு இல்லாத வாழ்க்கை உப்பிலாப் பண்டம் போன்றது. எத்தனை பணமிருந்தும் நிம்மதி அடைந்துவிட முடியாது. இறைவழிபாடு செய்வதன்மூலம் மனம் தூய்மையடையும் ; அமைதி பெறும் ; சாந்தி நிலவும். இந்நிலையில்தான் எமது மூளைக்கு தேவையான விடயங்களைப் புகுத்திக்கொள்ள முடியும். அமைதி இல்லாத நிலையில் எவ்வளவு நேரம் படிப்பினும் அதனால் ஏற்படப்போவது ஒன்றுமில்லை. எனவே வாழும் வளரும் மாணக்கராகிய நாம் இறைவழிபாடு செய்தல் அவசியம். வாழ்வாங்கு வாழவேண்டுமாயின் எல்லோரும் வழிபாடுசெய்தல் அவசியம் என்று கூறி முடிக்கின்றேன்.

யாழ். மத்தியகல்லூரி இந்துமாமன்றம் நடாத்தும் வாணிவிழா சிறப்புறவேண்டுமென முழுமனதுடன் வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதமும் அதன் பலனும்

★ ★

இன்றைய உலகில் வாழும் எந்த ஒரு மனிதனுக்கும் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்று அம்சங்களில் ஏதாவது ஒரு அம்சமாவது இருக்கத்தான் செய்யும். ஏனெனில் மனிதனானவன் சிறுபராயத்திலிருந்து வளர்ந்து பெரியவனானதும் தனது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு இவற்றையே வேண்டி நிற்கிறான். ஒருமனிதன் தனது சிறுபராயத்திலே கல்வியினைப் பெறுகிறான். அத்துடன் விளையாட்டுத் துறைகளின்மூலம் தனது உடலமைப்புக்குத் தகுந்த வீரத்தன்மையையும் உற்சாக மனத்தையும் பெறுகிறான். அவன் தனது சிறுபராயக் கல்வியை முடித்ததும் செல்வத்தை வேண்டித் தொழிலைப் புரிகின்றான். எனவே இத்தகைய மூன்று அம்சங்களும் ஒருவனது வாழ்வில் இன்றியமையாதனவாகும்.

இந்துசமயத்தவன் இத்தகைய அம்சங்களைப் பெற வேண்டியோ அல்லது பெற்ற மகிழ்ச்சியினாலோ கல்வி, செல்வம் வீரம் ஆகியவற்றுக்குக் கருத்தாவாகிய இறைவனைத் துதிக்கின்றான். இதற்காகவே அவன் பல திருவிழாக்களை வகுத்து அத்தினங்களிலே இறைவழிபாடாற்றுகின்றான். நவராத்திரி, திருவாதிரை ஆகிய திருவிழாக்களை அவன் கொண்டாடுகிறான். இவற்றுள் நவராத்திரியே அவன் வேண்டிய கல்வி, வீரம், செல்வம் ஆகியனவற்றை வழங்குகிறது. நவராத்திரி ஒரு விரதமாயும் அனுட்டிக்கப்படுகின்றது. நவராத்திரி விரதமானது சிவனின் திருவருட் சக்தியாகிய உமையம்மையை நோக்கி அனுட்டிக்கப் படும். இவ்வம்மையே வெவ்வேறு வடிவங்களைத் தாங்கி செல்வம், வீரம், கல்வி ஆகியனவற்றை வழங்குகின்றார். எனவே இவளைத் துதிப்பதனால் இத்தகைய வளங்கள் எம்மை வந்து அடையும்.

நவராத்திரியானது புரட்டாதி மாதத்து வளர்பிறைக் காலத்துப் பிரதமை தொடங்கி நவமி ஈறாகவுள்ள ஒன்பது இரவுகளும் இந்து சமயத்தவர்களால் அனுட்டிக்கப்படுகிறது. இந்து சமயத்திலே சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் ஆகிய ஆறு உபபிரிவுகளுள்ளன. இப்பிரிவுகளுள் சாக்த மதத்தைச் சேர்ந்தவர்களே சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடாற்றுவர். எனவே நவராத்திரியானது சாக்தர்களுக்கு மிக விசேடமானது. எனினும் ஏனைய ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினர்களும் இதனை முக்கிய விரதமாகக்கொண்டு அனுட்டிப்பார். ஆகவே இவ்விரதமானது எல்லா இந்துக்களாலும் அனுட்டிக்கப்படுகின்ற சிறப்பினையுடையது. நவராத்திரியின் ஒன்பது இரவுகளும் கல்வி, வீரம், செல்வம் ஆகிய மூன்றுக்குமாக மும்மூன்று இரவுகளாகப் பிரிக்கப்படும். முதல் மூன்று இரவுகளும் வீரத்தைவேண்டி துர்க்கையையும், நடுமூன்று இரவுகளும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும் இறுதி மூன்று இரவுகளும் கல்வியை வேண்டி சரசுவதியையும் துதிப்பர். இதற்காக ஒன்பது இரவுகளும் கும்பம் வைத்து தேவியை எழுந்தருளப்பண்ணி பூசை செய்வர். அத்துடன் இவ்விரவு வேளைகளில் கடலை, அவல், வடை போன்ற பலகாரங்களை அம்மைக்கு நிவேதித்து வழிபாடாற்றுவர்.

நவராத்திரி விரதத்தைப் பற்றி பல புராணக்கதைகளுள்ளன. அதாவது மகிடாசுரன் ஒருவன் முன்பு வாழ்ந்து வந்ததாயும் அவன் தனது வலிமையினாலே பலதுன்பங்களைத் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் மக்களுக்கும் உண்டாக்கினனெனவும், இத்துன்பங்களைப் பொறுக்கமுடியாத தேவர்களும் முனிவர்களும், உமாதேவியை நோக்கி விரதமிருந்தனர். இவ்விரதத்தினை ஏற்றுக்கொண்ட உமாதேவியார் சிங்கவாகனத்திலே எழுந்தருளி தேவர்களுக்காக மகிடாசுரனுடன் போரிட்டதாயும் இப்போர் ஒன்பது நாட்கள் நடந்ததாயும் கூறப்படுகிறது. இத்தினங்களே நவராத்திரி எனக்கொள்ளப்படுகிறது. இறுதி பத்தாம் நாளன்று அம்மை போர்புரிய முடியாது வன்னி மரத்தில் ஒலித்த அசுரனை வதைசெய்துவென்றாள். இத்தினம் விஜயதசமி தினம் எனப்படும். இத்தினத்திலேயே மானம்பூ எனப்படும் கன்னி வாழை வெட்டல் நிகழ்ச்சி ஆலயங்களிலே நடைபெறுகிறது. கன்னிவாழைவெட்டல் என்பது வன்னிமரமாக மாறிய அசுரனை அம்மை வதைசெய்ததைக் குறிப்பிடுவதாகும். இதன்போது ஆலயங்களிலே அருச்சகர் வாழையை இரண்டுவெட்டு மூன்று துண்டுகளாக்குவார். இந்நிகழ்ச்சிக்கான சித்தாந்தக்கருத்தானது ஆன்மாக்களைக் கட்டியுள்ள அறியாமை எனும் மும்மலங்களையும் திருவருட் சக்தியாகிய அம்மையானவள் தனது திருவருட்சக்தியினாலே போக்கியருள்வதனைக் குறிக்கும். இங்கு அசுரன் அறியாமை என்னும் மும்மலங்களையும் குறிக்கப்பயன்படுகிறான். எனவே இவ்விரதத்தினை அனுட்டிப்பவர்கள் தமது ஞானத்தைப் பெருக்குவதோடு தம்மைச் சூழ்ந்துள்ள அறியாமை நீங்கப்பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நவராத்திரி விரதமானது இந்தியாவிலே வேறுவிதமாக அநுட்டிக்கப்படுகிறது. இத்தினங்களிலே சிறுவர், சிறுமியர்கள் பொம்மைகளையோ உருவங்களையோ கொலுவைத்து வழிபடுவர். இலங்கையிலும் சில பகுதிகளில் இம்முறை கையாளப்படுகிறது. விஜயதசமித் தினத்தன்று வித்தியாரம்பம் எனப்படும் நிகழ்ச்சி நடைபெறும். இது ஏடு தொடக்கல் எனவும் பெயர்பெறும். இது பாடசாலைகளிலே கொண்டாடப்படுகிறது. இத்தினத்திலே பாடசாலைகளில் சிறுவர், சிறுமியர்களுக்கு ஏடு தொடக்கப்படும். அத்துடன் புதிய புதிய தொழில்களையோ, வேறு அம்சங்களையோ மக்கள் இத்தினத்திலேயே ஆரம்பிப்பர். இதனால் அவர்களுக்குப் போதிய வருமானமோ அல்லது சிறப்போ ஏற்படும். ஆகையால் இத்தகைய சிறப்புப் பொருந்திய நவராத்திரி விரதத்தினை அல்லது இத்திருவிழாவினைக் கொண்டாடுவதால் நமக்குப் பல நன்மைகள் ஏற்படும். எம்மிடையே நம்பிக்கையும், பொறுப்பும் வளரும். நாம் நினைக்கின்ற காரியங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய மனோதிடம் உண்டாகும். வீரஉணர்வும் உடல்பலமும் ஏற்படும். செய்கின்ற தொழிலில் அதிக வருவாய் உண்டாகும். இதனால் தொழில் பெருகும். கல்வியறிவு மாணவரிடையே விருத்தியுறும். மாணவரிடையே ஒழுக்கம் அடக்கம், சாந்தம் ஆகிய குணங்கள் உருவாகும். இந்நாட்களிலே கலையம்சம் பொருந்திய கொண்டாட்டங்கள் வெவ்வேறு இடங்களில் நடைபெறுவதனால் மக்களுக்குக் களிப்பினைத் தரும். எனவே இந்நவராத்திரியானது கலையம்சமும், விரதமும், மகிழ்ச்சியும் ஒன்றிணைந்த ஒரு திருவிழாவாக விளங்குகிறது.

V. நல்லைநாதன்
வகுப்பு 11 B
யாழ். மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பினால் ஐக்கியப்படுவோம்

மனிதன் தனது தோற்றத்தினையும் புவியின் தோற்றத்தினையும் ஆராய்ந்து அறியும் அளவுக்கு விஞ்ஞானரீதியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றான் என்பது மறுக்கமுடியாத உண்மை. அதேவேளை உலகில் சமயக் கொள்கைகள் உண்மைகளை மறைக்கின்றன. எனவே சமயமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று நேரடி விரோதிகள் என்று தத்துவஞானிகளும் கூறியுள்ளனர்.

எது எப்படியிருந்தபோதும் இதுவரை மனிதசமூகத்தின் வளர்ச்சியிலோ, அல்லது போக்கப்பட்ட மிருகத்தன்மையைப் போக்கினதிலோ சமயக்கொள்கைகளுக்கும் கணிசமான பங்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

எல்லா சமூகவியல் தத்துவங்களுமே ஏறத்தாழ ஒரு நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவைகளே. ஆனால் சமயத்தத்துவங்களோ இவற்றைவிட எத்தனையோ நா. ஆ. முற்பட்டவை. அன்றைய சூழலில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதரின்மத்தியில் அவர்களுக்கு ஏற்றவாறு தத்துவங்களை எளிமையாகவும் செய்கைகளாகவும் குறியீடுகளாகவும் சொல்லி வைத்தனர். அத்துடன் அன்று தத்துவங்களைச் சொன்னவர்களுடைய வளர்ச்சியையும் அளவுக்கு அதிகமாக நாம் எதிர்பார்க்கவும் கூடாது.

மிருகங்கள் மனிதனையும் மனிதன் மிருகத்தையும் மாறி மாறி வேட்டையாடித் தமது உணவுத் தேவையைப் போக்கிக்கொண்ட சமூக அமைப்புக்கும் இன்று குளிசை வடிவில் உணவை எடுக்கும் கம்பியூட்டர் உலகிற்கும் நிறைந்த வேறுபாடும் பெரிய இடைத்தூரமும் இருந்தே ஆகின்றது.

சாப்பிடுவதற்காக வாழ்கிறோமா? வாழ்வதற்காகச் சாப்பிடுகிறோமா? என்று தெரியாமல் இலட்சியமற்று வாழ்ந்து கொண்டிருந்த மனிதனிடம் முதன்முதலில் வாழ்க்கை இலட்சியம் ஒன்றை அறிமுகப்படுத்தியவை சமயங்களே. இருந்தும் அன்று சொன்ன வேதம் அல்லவா? சில சில சொற்களோ நடைமுறைகளோ நவீனமற்றிருக்கலாம். இருந்தும் அடிப்படைத்தத்துவத்தில் எந்த மாறுதலும் கிடையாது.

ஒரே திசையை நோக்கி வழிபடுவதை ஒருமைப்பாட்டை விளங்க வைத்தல் என்று இஸ்லாமியர் கூறுகின்றனர். மக்கள் நன்மைக்காக அன்புக்காக எந்த சுமையையும் தாங்கக் கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கின்றது கிறிஸ்தவம். எல்லா உயிர்களிடத்தும் அன்பாக நடந்துகொள்ளக் கற்பிக்கின்றது பௌத்தம். இதேபோல அன்பே சிவம் என ஆணித்தரமாகக் கூறிவிடுகிறது. இந்து மதம் திருமூலர் திருமந்திரத்திலிருந்து

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாக யாரும் அறிந்திலார்
அன்பே சிவமாக யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே

இவ்வாறு அறியமுடிகிறது. எனவே மொத்தத்தில் எல்லாச் சமயங்களுமே அன்பை ஜீவநாடியாகக்கொண்ட தீமை தவிர்ந்த நன்மையே செய்யுமாறு கேட்கின்றன.

இதை நடைமுறைப்படுத்துவதற்கென சமயங்கள் தத்துவக் கதைகள், விழாக்கள் பண்டிகைகள் என்பவற்றை அன்று ஆக்கி அளித்தன. அன்றைய இலக்கிய வடிவங்கள் இன்று முழுமையாக மாறிவிட்டன.

காலத்துக்கேற்ற கலைகளும் - கல்வி
காலத்துக்கேற்ற ஒழுக்கமும் நாலும்
ஞாலமுழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலென்றுமில்லை

எனப் பாரதி குறிப்பிட்டதை மனதிற்கொண்டு சமயக்கதைகள், தத்துவ விளக்கங்கள் என்பன நவீன இலக்கிய வடிவங்களாகப்படவேண்டும். எல்லா சமயங்களும் அன்பு என்ற தமது அடிப்படைத் தத்துவத்தின்கீழ் ஐக்கியப்படவேண்டும். இவ்வுலக மறுமலர்ச்சி பொருளாதார சீராக்கல் வேலைவாய்ப்பு என்பவற்றிலும் கவனம் செலுத்தவேண்டும். இல்லை எனில் சமயங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்துபோகும் அபாயமொன்றை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம்.

ஏனெனில் பண்டைய மனிதன் இயற்கைக்குப் பயந்தான். இன்றைய மனிதனோ இயற்கையின் அதிகஅம்சங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டான். எனவே எல்லா மதமும் ஒருமுகப்பட்டு அன்பே பொதுவிதியாக்கி அனைத்து உலக மக்களையும் வழிநடத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இக்கட்டுரையில் இக்கருத்தை முழுமையாகவோ விரிவாகவோ விபரிக்க முடியாமைக்கு வருந்துகின்றேன். மன்னிக்கவும்.

தி. சிவானந்தன்
12 A
யாழ். மத்தியகல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாமன்ற இயக்குநரின் பாராட்டு

சமயம் மனிதவுள்ளத்தைப் பக்குவப்படுத்தி மனிதனை வையத்து வாழ்வாங்கு வாழச் செய்வது; மனிதன் அன்பு, ஒழுக்கம், சான்றுமை முதலிய பண்புகளைக் கடைப்பிடித்து மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும் என்பதையே உலகிலுள்ள சமயங்கள் யாவும் வலியுறுத்துகின்றன.

இந்துக்கள் தொன்றுதொட்டு தெய்வந் தோய்ந்த நெஞ்சினராய் அருளுள்ளம் படைத்தவராய் வாழ்ந்துவருகின்றூர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தெய்வசிந்தனையைத் தூண்டி இறைபற்றையும் பக்தியையும் வளர்ப்பனவாக அமைந்துள்ளன.

இன்று நம்நாட்டுப் பாடசாலைகளில் சமய விழாக்களை வெகுவிமரிசையாகக் கொண்டாடும் வழக்கம் வளர்ந்துவருகின்றது. மாணவர்கள் விமரிசையாகக் கொண்டாடும் விழாக்களுள் வாணிவிழாவும் ஒன்றுகும். இவ்விழாக்களைக் கொண்டாடுவதால் மாணவரின் கல்வியறிவு, கலையறிவு, சமய அறிவு போன்றவை வளர்கின்றன. இதனுல் அவர்கள் நல்ல குடிமக்களாகவும் ஒழுக்கமுடையோராகவும் பண்புடையோராகவும் சமூகத்தில் வாழ வழிகள் ஏற்படுகின்றன.

எங்கள் கல்லூரியில் இயங்கிவரும் இந்துமாமன்றம் மாணவரின் நலன்கருதி அவர்களிடையே நல்லபல அறப்பண்புகளையும் ஆன்மீக உணர்வுகளையும் பக்தியையும் வளர்ப்பதற்காகவும் எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்காகவும் சமயவிழாக்களை நடாத்துவதோடு நவராத்திரி காலத்தில் மத்தியவாணியென்ற மலரையும் பல ஆண்டுகளாக வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டும் மத்தியவாணி பல அறிஞர்களதும் ஆசிரியர்களதும் மாணவர்களதும் கட்டுரைகளை ஏந்தி புதுப்பொலிவோடு வெளிவருகின்றது. இம்மலர் வெளிவர ஒத்தாசையும் உதவியும் நல்கிய அதிபருக்கும் ஆசிரியப்பெருமக்களுக்கும் அன்பர்களுக்கும், மாணவமணிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுகளும் உரித்தாகுக.

ம. வ. உமாபதிசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன் சுருக்கம்

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

அகரம் என்னும் உயிரெழுத்தின் ஒலி எல்லா எழுத்துக்களுக்கு முதலாயும் அவற்றிற் கலந்தும் உள்ளது. ஒப்பிலாத எமது இறைவனும், அதுபோலவே! உலகிலும் உயிர்களிலும் காற்று நிலைபெற்று உள்ளனர். எல்லாவற்றையும் தனக்குள்ளே வைத்திருக்கும் நிறைவினாலும், உள்ளாதியாக யாவற்றிலும் நன்றியிருக்கும் வகையினாலும் அடியார்களுக்கும் அளவிலாத பேரருளினாலும், தொழாதவர்க்கு கிடைத்தற்கரியவராயும் உள்ள இறைவன் இணையிலாதவராவர். எத்தனை பிறவி எடுப்பினும் விடாது ஆத்மாவைப் பற்றித் தொடரும் மும்மலங்களை, ஞானவடிவமாயுள்ள மருந்தை வழிபடுவதன்மூலம் அகற்றிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. எல்லா இடத்திலும், எல்லா உயிர்களிலும்நெருப்பினது வெப்பமாக சுடுநீரில் கலந்திருப்பதுபோல் இரண்டறக் கலந்துள்ள இறைவன் அப்படித் தான் இருப்பதனாலும் தனது ஒப்பற்ற தன்மையில் சிறிதும் மாறாதவர்.

இன்றுவரை இறையடி அடைந்தோரில் எண்ணிக்கை, இவ்வுலகத்தில் அவர்கள் பிறந்த நாட்களின் எண்ணிக்கைக்குச் சமன்; இனிமேல் முத்தியடைய இருக்கும் உயிர்களினளவு இனி அவை பிறக்கப்போகும் நாட்களினளவுக்குச் சமனாகும். சுய நினைவிலே பகலிலே சூழலிலே பார்த்த நிகழ்ச்சிகளை, கற்பனையிலே உருவாக்கி மறந்து மயங்குகின்ற அற்ப வலிமையுடைய ஆன்மாக்களுக்கு தாமே தனித்துச் செய்யக்கூடிய சுதந்திரச் செயல் ஒன்றும் கிடையாது. ஊனக்கண்ணில் தெளிவில்லாவிடில் ஒளிதரும் சூரியசந்திரரும் காணமுடியாத இருளையும் அறியமுடியாது. அதுபோலவே ஞான உணர்விலா ஆன்மாக்களுக்கு சிவ ஞான ஒளியும் இருளாகிய ஆணவமும் பயன் தரும் தத்துவங்களும் பயன்படா. திருவருள் கிட்டாத ஆன்மாக்களுக்கு ஞானமும் அறியாமையாகவே தெரியும். தோன்றியதிலிருந்து இடைவிடாது பல பிறவிகள் எடுத்துத் துன்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுழலும் ஆன்மாக்கள், பகலிலே கண்தெரியாதிருக்கும் கோட்டான்களைப் போலிருக்காது, எப்போதும் கிடைக்கக்கூடிய திருவருளாகிய ஞான ஒளியைத் தரிசித்து மலம்நீக்கி, பிறவியறுத்து இறையடி சேரலாம்.

உலகத்தின் இருள், எல்லாப்பொருட்களையும் தன்னுள் மறைத்துக்கொண்டு தன்னைமாத்திரம் காட்டும். ஆனால் ஆன்மாவைப்பிடித்துள்ள ஆணவ மலமோ ஆன்மாவுக்கு முத்திக்குரிய வழிகளைமட்டும் காட்டாதிருப்ப தோடல்லாது தன்னையும் காட்டாது. ஆணவம் இருளிலும் கொடியது. ஆன்மாக்கள் உண்மையை அறிந்து முத்திநிலை எய்தாதிருந்து, உழலும்நிலை ஆணவத்தால் ஏற்பட்டதாகும். மும்மலங்களாகிய ஆணவம், கன்மம் மாயை என்பவற்றினால் பிடிக்கப்பட்ட ஆன்மாவுக்கு ஆணவ வலியை நீக்குவதற்காக சுத்தமாயை, தனு, கரண, புவன போகங்களை அளித்து உதவுகிறது. இவ்வளவையும் பெற்ற பின்னரும் ஆன்மா ஞான ஒளியை அறிந்து வழிபடாதாயின் அதனைச் சூழ்ந்துள்ள ஆணவமலம் என்றும் தீராது.

ச. பிரகாஷ் பத்மநாதன்
12 B
யாழ். மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்ச்சிகள்

★

## உயர்தர மாணவர்கள் வழங்கும்

## வில்லிசை

மீற்றிங் ஒவ் 'ஞானசம்பந்தர் அன்ட் நாவுக்கரசர்'

தயாரிப்பு: பிரகாஷ் குழுவினர்

பங்குபற்றுபவர்கள்:

செல்வன் S. P. பிரகாஷ் — செல்வன் A. ஜெகசோதி
செல்வன் V. ரணராஜா — செல்வன் P. சுரேஸ்
செல்வன் S. ஶ்ரேஜன் — செல்வன் K. சபாரெட்ணம்
செல்வன் T. சஞ்சயன்

## மத்தியதர மாணவர்கள் வழங்கும்:

## இசையரங்கு

பங்குபற்றுவோர்கள்:

செல்வன் க. மயூரதன்
செல்வன். சி. ஆனந்தராஜா
செல்வன் இ. மணிவண்ணன்
செல்வன் ரா. சாந்தன்

## கலாமன்றம் தயாரித்து அளிக்கும்

## உயர்தரமாணவர்களின்

"யமதர்மம்",

(நாடகம்)

கதைவசனம்: செல்வன் K. ஜீவமோகன்
செல்வன் T. கௌரீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகர்கள் :

செல்வன் T. கௌரீசன் — செல்வன் K. ஜீவமோகன்
செல்வன் G. செந்தீஸ்வரன் — செல்வன் K. பாலசுப்பிரமணியம்
செல்வன் R. வரதராஜா — செல்வன் Y. ஜெகநேசன்
செல்வன் S. ஜோய்பூரணச்சந்திரன் — செல்வன் G. நந்தகுமார்
செல்வன் E. சுரேஸ்

**கலாமன்றம் தயாரித்து அளிக்கும்**

## மத்தியதர மாணவர்களின்

**" தாய் " (நாடகம்)**

நடிகர்கள் :

செல்வன் S. ஆனந்தராஜா — செல்வன் S. M. டேவிட்
செல்வன் V. J. போமன்—செல்வன் D.V.E. ரவிச்சந்திரன்
செல்வன் S. சபில்

நிகழ்ச்சித் தொகுப்பு: இந்துமாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்ப தொகையே கையிருப்பிலுண்டு
ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு முந்துங்கள்
பினன்ஸ் வசதிகளுடன்

கொண்டா மோட்டார் சைக்கிள்கள்

வர்ண நிறங்களில் சகல மொடல்களும்
நேரடி இறக்குமதியாளர்கள்

★

**மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்**

122, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

போன் : 8267.

With the best wishes of :

**MASTER INSTITUTE**

B. M. C. Lane
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள் :

**ஜெனரல் மாக்கெற்றிங் ஒகனைசேஷன்**

- ★ யமஹா மோட்டார் சைக்கிள்கள்
- ★ ஹீறோ மோட்டார் உழவுயந்திரங்கள்
- ★ யமஹா மின்ஜெனி இயந்திரங்கள் (மண்ணெயில் இயங்குபவை)
- ★ பியசோ பிரதிபடுத்தும் மை
- ★ சூரியா கோடியல்

என்பவற்றைப் பெற்றுக்கொள்ள

வடமாகாணத்தில் நிகரற்ற ஸ்தாபனம்

**ஜெனரல்**

**மாக்கெற்றிங் ஒகனைசேஷன்**

**34, பாங்சால் வீதி யாழ்ப்பாணம்**

---

யாழ் மத்திய கல்லூரி இந்துமாமன்றத்துக்கு

எமது உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

சகலவித இரும்பு, பித்தளை சாமான்கள்

பல வர்ண மைவகைகள்

முதலிய சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**சிங்கப்பூர் கம்பனி**

**மலேயன் ரேடிங் கம்பனி**

**128, 130, கே. கே. எஸ். வீதி**

**யாழ்ப்பாணம்**

தொலைபேசி : 547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வாணிக்கு
எமது வாழ்த்துக்கள்
சுபாஸ் ஹோட்டல்
அன்
மொடேர்ன் கபே
★
176, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
★
தொலைபேசி: 578

With the best Compliments
from
VINAYAGAM
INDUSTRIAL
WORKS
NELLI CRUSH
DISTILLED WATER
PICKLES
No. 353/1 Clock Tower Road
Jaffna.
Phone No. 8013

With the Best Compliments of
Calling for your fashionable
and beauty Tex.
KALBANAS
★
Kalbana Textiles
70, New Market
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments of :

# AMBALAVANAR & SONS

Dealers in: Electrical Goods & Radios

PAPER MERCHANTS, STATIONERS & CROCERS

196, K. K. S. Road,

JAFFNA.

T'grams: 'VANARSONS' Telephone : 8291

★

Head Office :

**Pearlites**

78, Maliban Street,
Colombo 11.

Tel ; 24821 - 28244

T'grams : SIVAPEARL

Associates ;

**Ambalavanar & Sons**

78, Maliban Street
Colombo 11.

Tel : 24821 - 28244

T'grams : VANAR SONS

★

**LUCKSHMI BHAWAN**

97, OLCOTT MAWATHA
COLOMBO 11.

Tel : 24821.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லவேண்டும் இவர்களுக்கு!

★ இம்மலரை சிறந்த முறையில் வெளிவர விளம்பரங்கள் தந்து உதவிய வியாபார ஸ்தாபனங்கட்கும், இம்மலரை அலங்கரிக்க கட்டுரைகள் தந்து உதவிய யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு அவர்களுக்கும் மாணவர்களுக்கும்...

★ விழாவின்போது உதவிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் ...

★ அச்சுப்பிரதிகள் சிறந்த முறையில் உருவாக்கிய யாழ்ப்பாண அச்சக நிறுவனத்தினர்க்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக:

நிர்வாகக்குழு சார்பில்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ATTRACTIVE DESIGNS OF

**Modern Textiles**

Tailaring for your statistaction from

# Refine Mod Centre

**41, Grand Bazaar**

**JAFFNA**

Phone: 8125

அன்பளிப்பு :

**சி. சின்னத்துரை**

**அன்ட்**

**பிறதர்ஸ்**

**39 கே. கே- கே. எஸ். வீதி**

**யாழ்ப்பாணம்**

போன் : 283

தந்தி : கல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வாணிக்கு எமது வாழ்த்துக்கள்
அன்பளிப்பு

# சிறி பத்மநாதா ஸ்ரோர்ஸ்

105 கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 568

யாழ் மத்திய கல்லூரி இந்துமாமன்றத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

ஐஸ்கிறீம் ஐஸ்சொக் ஐஸ்பழம்

ஏனைய ஐஸ்கிறீம் வகைகளையும் சுவைத்திட
நீங்கள் நாடவேண்டிய இடம்

# றியோ கிறீம் கவுஸ்

★

75 பாங்சால் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dealers in ;

ALL BICYCLES

ALL KINDS OE BICYCLE PARTS

and

PETRO MAX PARTS WATCHES CLOCKS

FOUNTAIN PENS and OILMAN HARES Etc.

★

# MANIAM STORES

53, Kasturiar Road

JAFFNA Telephone: 8226

சுவைமிக்க

★ ஐஸ்பழம்

★ ஐஸ்சொக்

போன்றவற்றிற்கு

சிறந்த இடம்

R.V.G. இறீம் கவுஸ்

39, பீச் றோட்

யாழ்ப்பாணம்

தரமான

சிறந்த

அச்சுவேலைகளுக்கு

யாழ்ப்பாண அச்சகம்


407, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரின்ஸ் துறையில்
41 வருடகால அனுபவம்

உங்கள் பணத்திற்கு
சிறந்த பாதுகாவலர்



# தி பிரின்ஸ்
# கம்பனி லிமிட்டெட்

249 C மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
*தொலைபேசி : 7680*

தலைமை அலுவலகம் சிலிங்கோ மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க்பார்

சுவைமிக்கது, சுத்தமானது,
தரம் மிக்கது

ரொட்டி கொத்துரொட்டி
முட்டைரொட்டி, குறுமா, புரியாணி
அப்பம் வட்டிலப்பம் கட்லட் ரேல்
பற்றிஸ் சர்பத் ஒரேஞ்ஜூஸ்

மற்றும்
தித்திப்பான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகளுக்கும்
நாட வேண்டிய இடம்

# மில்க்பார்

(ஓடர்கள் உடன் கவனிக்கப்படும்)

22, 24, பிரதானவீதி யாழ்ப்பாணம்

எங்கும் எப்பொழுதும் எல்லோரும்
நாடுவது

# மில்க்பார்


யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org